அவசரப்பட்டு அனர்த்தம் விளைக்காதீர்!

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (18—2—50) வெளியூர் (19—2—50) [இதழ் 172

கருத்து வேற்றுமைகளை கவனித்து காரியத்திலிறங்குக!

—(0)—

வாழ்ந்தோரே மேலும் வாழ வழி செய்யாதீர்

—(0)—

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை பற்றி நிதி அமைச்சர் கருத்துரை

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை நீக்குவதற்குரிய காலம் இன்னும் வரவில்லை என்றே நான் கருதுகிறேன். காங்கிரஸ் கமிட்டிகள், ஜில்லா போர்டுகள், முனிசிபாலிட்டிகள் முதலியவற்றைக் கலந்தாலோசித்து, அவற்றின் கருத்தறிந்த பிறகே இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை உத்தரவை மாற்றியமைக்கவேண்டும். இந்த வகுப்புவாரி முறை உத்தரவை நீக்கிவிட வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் கேட்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் அவ்வுத்தரவை நீக்கக்கூடாது என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட கருத்து வேற்றுமைகள் பலமாக இருக்கின்ற இன்றைய நிலையில் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை மாற்றியமைப்பது பற்றியோ, நீக்குவது பற்றியோ அரசியலார்க்குத் தக்க அறிவுரை தருவோர் உண்டா என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, காலநிலையறிந்தே இவ்வுத்தரவை அரசியலார் நீக்கவேண்டும்.

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை ஒழிக்குமுன், அம்முறையால் பலன் அடைந்தோர் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கண்டறிவதே முக்கியம். இதைவிடுத்து பழங்காலந்தொட்டு சில நன்மைகளைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் கூட்டத்தினரின் கூப்பாட்டைக் கேட்டு மாத்திரம் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை உத்தரவை ரத்து செய்துவிடக்கூடாது.''

உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதெப்படி என்பது பற்றி விவாதிப்பதற்காக, கடந்த வியாழக்கிழமையன்று கூடிய சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் உணவுப் பிரச்னை மட்டுமின்றி, உத்தியோகப் பிரச்னைகள் உட்பட வேறு பல பிரச்னைகளும் அடிபட்டன. அவ்வமயம் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை பற்றி பேச நேர்ந்தபோது, நிதி அமைச்சர் தோழர் கோபாலர் அவர்கள் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் தாம் மேலே எடுத்துக் காட்டப்பட்டிருப்பவை.

தோழர் கோபாலரின் பேச்சுகளிலிருந்து வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் அவருக்கிருந்தபோதிலும், நிலைமை அதற்கு இடந்தரவில்லை என்பது ஒருவாறு புலனாகிறது. வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை நீக்கப்பட வேண்டுமானால், அதற்கேற்றப் பக்குவம் ஏற்பட்டுவிட்டதா என்பதை அறிந்தே செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார் அவர். அதாவது, காலத்தை எதிர்பார்க்கிறார் என்பதே இதன் பொருள். எனினும், இங்ஙனம் காலமறிந்து, சூழ்நிலை அறிந்து அரசியலார் பணியாற்ற வேண்டும் என்று பரிவுடன் கூறும் அவர் பரிபக்குவத்தை, ஓரளவுக்கு நாம் பாராட்டத்தான் வேண்டியிருக்கிறது.

மேலும் அவர் பேசியிருக்கும் பேச்சுகள் அரசியலார்க்கு தரும் நல்ல அறிவுரைகளாக அமைந்திருக்கின்றன.

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை மாற்றுவதோ, நீக்குவதோ செய்வதாயின், அதற்கு அம்முறையால் பலனடைந்தோரின் கருத்தறிவதே சாலச் சிறந்தது என்றும் பன்னெடுங்காலமாக சுகபோகம் அனுபவித்துவந்த ஒரு கூட்டத்தாரின் கருத்தினை மட்டுமே அறிந்து காரியத்தில் இறங்கலாகாது என்றும் அவர் வற்புறுத்திக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

"பண்டுதொட்டு சில சலுகைகளைப் பெற்றுவாழும் வகுப்பினர்" என்று ஒரு சாராரையும், அத்தகைய சலுகைகள் பெறாத வகுப்பினர் என மற்றொரு சாராரையும் அவர் குறிப்பிடுகிறார். தோழர் கோபாலர் பொதுப்படையாகக் குறிப்பிடும் இதே பிரச்னைதான் ஆரிய—திராவிடப் பிரச்னையாக நாட்டிலே காட்சியளிக்கிறது. ஆனால் இதனை ஆரியம் என்றும், திராவிடம் என்றும் பிரித்துப் பெயரிட்டுக் காட்டும்போது, நமது பேச்சும், எழுத்தும் கோபாலர்களுக்குக் கோபத்தை உண்டுபண்ணுகிறது. இப்படிப்பட்ட நிலை மாறவேண்டும்.

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையின் பலாபலன்கள் எவை என்பதைத் தோழர் கோபாலர் இன்றைய தினம் உணர்கிறார், அந்த உணர்ச்சியின் பலனே அவர் அரசியலார்க்கு அதுபற்றி 'உபதேசம்' புரிவதாகும். இந்த உபதேசங்கள் இத்துடன் நின்றுவிடக்கூடாது; வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை எப்படி ஒழிப்பது, எப்பொழுது ஒழிப்பது என்பதற்கு மாத்திரம் அரசியலார்க்கு அறிவுரை தர பழகியிருக்கும் கோபாலர், அது ஏன் தோன்றிற்று, எப்படித்தோன்றிற்று, எதனால் தோன்றிற்று என்பன போன்ற வினாக்களை எழுப்பிப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் கட்டின் உண்மைநிலை அறிய முடியும்; அதுதான் இருக்கின்ற சிக்கலை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

இந்தோ சீனாவால் உலகத்திற்கே ஆபத்து!

—(0)—

"கார்டியன்" ஓலம்!

லண்டன், பிப். 17—

செஞ்சீன பொம்மை நாட்டு அந்தஸ்தை அங்கீகரித்தது அல்லது ரஷ்யாவுடன் சரிசமத்துவ அந்தஸ்திற்காக வாதாடுமா என்று சந்தேகம் இன்னும் இருக்கிறதே ஒழிய, கம்யூனிஸ்ட் ஆதிக்கம் அதிகரிக்கும் திட்டம் பலப்படும் என்ற விஷயம் மட்டும் சந்தேகத்திற்கிடமின்றியில் தெளிவாக இருக்கிறது என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மான்செஸ்டர் கார்டியன் எழுதியுள்ள தலையங்கத்தில், உலகத்திற்கே ஆபத்து விளைவிக்கும் அரங்கமாக இந்தோ சீனா ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்றும், ஆபத்து சீக்கிரமே பர்மா, திபேத் முதலிய இடங்களுக்குப் பரவும் என்றும் எச்சரித்து எழுதியிருக்கிறது.

——

லண்டன், பிப். 17—

சூரிய கிரணங்கள் வீணாகாமல் உபயோகிக்க உயர்த்த மாளிகையில் விசேஷ இடங்களை லண்டனிலும் சுற்றுப்புறங்களிலும் அமைக்க ரூ. 13300,000 செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

பெட்ரோலுக்குப் பதில் தண்ணீர்!

——

ஜெர்மன் விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு

பெர்லின், பிப். 17—

பெட்ரோலைக்காட்டிலும் சிறந்த எரி பொருளாக தண்ணீரை மாற்ற முடியும் என்பதை மேற்கு ஜெர்மனி விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். மேலும் அனல் இதை உற்பத்தி செய்வது மிகவும் கஷ்டம் என்றும், ஆனால் அவ்வேலையும் சமாளிக்க அவர் வழி கண்டுபிடித்து வருகிறார் என்றும் தெரிகிறது.

—ருசோப்

ருமேனியாவில் வக்கீல்கள் உரிமை பறிபோகிறது!

வியன்னா, பிப். 17—

ருமேனியாவிலுள்ள வக்கீல்கள் கம்பெனி மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ தொழிலை நடத்த ஆஜராகக்கூடாதென்றும் 'மக்கள் ஜனநாயக' ஆட்சிக்கு எதாவது ஆபத்து வருவதுபோல இருந்தால் அதை அவர்கள் சர்க்காருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ருமேனிய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ருமேனியாவின் ஒவ்வொரு நகரங்களிலும் வக்கீல்கள் சங்கம் ஏற்படுத்தப்படுமென்றும் அதில் சேர்ந்து அதுசொல்படிதான் தொழில் நடத்த வேண்டும் என்றும், வக்கீல்கள் தங்கள் செய்யும் வேலைக்கு எவ்வளவு பணம் வாங்கலாம் என்பதை அச்சங்கங்களே நிர்ணயிக்கும் என்றும் அவ்வுத்தரவு கூறுகிறது.

தெ. கி. ஆசிய நாடுகளுக்கு உதவி

யு. எஸ். ராஜதந்திரிகளின் யோசனை

லண்டன், பிப். 17—

பாங்காக்கில் கூடிய யுனைடெட் ஸ்டேட்ஸ் கீழ்க்கோடி ராஜதந்திரிகளின் மாநாடு முடிவடைந்துவிட்டதென்றும், தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கு ராணுவ, பொருளாதார, டெக்னிகல் உதவி உடனே செய்யப்படவேண்டும் என்றும், அம்மாநாடு யு. எஸ் சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதாகவும் இங்குகிடைத்துள்ள செய்திகளிலிருந்து தெரிகிறது.

தென்கிழக்கு ஆசியா பரஸ்பர உதவித் திட்டத்தில் காமன்வெல்த்துடன் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிய வருகிறது.

தென்கிழக்கு ஆசியநாடுகள் அவைகளாகவே முன்வந்தால், பசிபிக் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்த அமெரிக்கா தயாராகவே இருக்கும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் வட்டாரங்களில் கூறப்படுவதாகத் தெரிகிறது. தென்கிழக்கு நாடுகளுக்கு முதலில் பொருளாதார உதவியே அத்யாவசியம் என்று மேநாட்டு விமர்சகர்கள் கருதுகின்றனர்.

சீன-ரஷ்ய ஒப்பந்தம்

—(0)—

சீன கம்யூனிஸ்டுகளுக்கு பூரண திருப்தியில்லையாம்!

லண்டன், பிப். 17—

சீன ரஷ்ய உடன்படிக்கை, சீன கம்யூனிஸ்டுகளிடையே பூரண திருப்தியை அளித்ததாகத் தெரியவில்லை என்று, இங்குள்ள ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

1. ஸிங்கியாங் விஷயமாக எதுவும் கூறப்படவில்லை. 2. வெளிமங்கோலியாவின் சுதந்தரத்தை சீனா ஏற்கவேண்டும், 3 போர்ட் ஆர்தர், மஞ்சூரிய ரயில்வேக்கள் இவைகளின் மீதுள்ள ரஷ்ய ஆதிக்கம் நீங்க, இரண்டு ஆண்டு காலம் பிடிக்கும். 4. டைரன் விஷயமாக தெளிவில்லாத உறுதிமொழி. 5. மிகவு குறைவான பொருளாதார உதவி—இவைகளால்தான் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் தேர்தல்

——

பெவினுக்கு பெரும் எதிர்ப்பு!

லண்டன், பிப். 17—

பிரிட்டனில் தேர்தல் பிரசாரம் மின்வேகத்தில் மும்முரமாக நடைபெறுகின்றன கிழக்குஉலவிச் தொகுதியில் அபேட்சகராகப் போட்டியிடும் பெவினை எதிர்த்து கம்யூனிஸ்டு பாமிரத் கன்ஸர்வேடிவ் கேர்வெல் மற்றுமொருவர் போட்டியிடுகின்றனர். பெவின் தன் வெற்றியில் நம்பிக்கையுடனேயே இருக்கிறார் போட்டி பலமாக இருக்கும் என்றும் அப்படியே பெவின் வெற்றிபெற்றாலும் குறைந்த மெஜாரிட்டி மூலமே அவர் வெற்றிபெற முடியும் என்றும் கன்ஸர்வேடிவ்கள் கருதுகின்றனர்; கம்யூனிஸ்ட் சிறிது ஆதரவு இருக்குமெனச்சொல்லப்படுகிறது.

அனுமானின் அட்டகாசம்!

லண்டன், பிப். 17—

லண்டனுக்கு வந்துகொண்டிருந்த விமானத்தில் 412 குரங்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. ஒரு குரங்கு மட்டும் எப்படியோ தப்பி பிரயாணிகளின் மயிரையும் காதுகளையும் பிடித்து இழுத்து விமானத்தில் ஏக அட்டகாசம் செய்ததாம் இக்குரங்கு விமானத்தின் கண்ட்ரோல்களிலும் விஷமம் செய்ய ஆரம்பித்த பின்னர் எங்கேயோ பதுங்கி விட்டதாம் விமானம் இறங்கியபின் இக்குரங்கு பிடிக்கப்பட்டு இதரகுரங்குகளுடன் சேர்க்கப்பட்டது, இக்குரங்குகள் எல்லாம் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. (ருசோப்)

மாலை மணி

சென்னை 18—2—50 சனிக்கிழமை

மந்திரியாரின் முகாரி !

சென்னை கவர்னரின் துவக்க நாள் சொற்பொழிவினை யொட்டி, சென்னை சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒருவாறு முடிந்துவிட்டது—முடியத்தானே வேண்டும்—முடியத்தானே செய்யும். கவர்னர் 'மோகன'த்தில் பேச்சைத் துவக்கிவைக்க, கனம் கோபாலர் அதை 'முகாரி'யில் கொண்டுபோய் முடித்துள்ளார்.

கவர்னரின் சொற்பொழிவிலே அகமகிழ்ச்சி கலந்திருக்கும் அளவுக்கு, நிதி அமைச்சர் கோபாலரின் குரலிலே ஆத்திரம் கலந்திருக்கிறது. இரண்டிலும் நாட்டைப் பிடித்திருக்கும் நலிவுகளைப் போக்கும் வழிவகைகள் காணப்படவில்லை. புதிய 'குடியரசின் கொலுவு கண்டு உளம்பூரித்து உவகைகொள்ளும்படி கொட்டியுள்ளார் கவர்னர். மற்றவர்களும் உவகை கொள்ளுவார்கள் என நம்பிக்கையில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோரும் தலையாட்டிக் காண்பிப்பதல்லாமல் வேறொன்றும் அறியார்கள். ஆகவே, அவர்கள் தம் கருத்தை ஆதரித்தே தீருவார்கள் என்ற நம்பிக்கையில் கவர்னர் அகமகிழ்ச்சியைத் தெரிவித்தார். அவர் நம்பிக்கைக்கு மாறுபடாத வகையில் பெரும்பாலான சட்ட மன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் நடந்துகொண்டுள்ளார்கள். எனினும், உண்மைக்கும், உரிமைக்கும், உயர்வுக்கும் பாடுபட வேண்டுமென்ற நோக்கத்தில், ஒருசிலர் அரசாங்கத்தின் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டியுள்ளனர். அப்படி எடுத்துக்காட்டுதல் நிதி அமைச்சர் உள்ளத்தில் புயலைக் கிளப்பியுள்ளது. கவர்னர் சொற்பொழிவுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் பேரில் எழுந்த விவாதமானது, தோழர் கோபாலருக்கு மிக்க கோபத்தை உண்டாக்கி விட்டது. விவாதத்திற்குப் பதிலளிக்கும் முகத்தான் அவர் தம் கோடைக் கனலைக் கக்கி; லீக் அங்கத்தினர்களைச் சாட முடிந்த அளவுக்குச் சாடியுள்ளார். அதே சமயத்தில், காங்கிரஸ் சாதித்த அருமை பெருமைகளைப் பற்றியும், மக்கள் அவற்றை அறிந்துகொள்ளாமலிருக்கும் அறியாமையைப் பற்றியும் விதந்து கூறியுள்ளார்.

விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் உணவு நெருக்கடி—பஞ்ச நிலைமை—வேலையில்லாத் திண்டாட்டம்—விலைவாசிகள் உயர்வு—கட்டுப்பாட்டின் கொடுமைகள்—தொழிலாளரின் துயர நிலை—சுகாதார வசதி கட்டாயக் கல்வி வசதி—ஆந்திர மாகாணப் பிரிவினை ஆகிய பல்வேறு பிரச்சினைகளும் கவர்னர் பேச்சில் இடம் பெறாதது குறித்துக் குறிப்பிட்டு, அவை பற்றித் தம் கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர். தம் மந்திரி சபையையும், தம் ஆட்சி முறையையும் பாராட்டிக் கொண்டே இராமல், குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்ட எதிர்க் கட்சியினரும், பிற நேர்மையாளரும் முனைந்ததற்காகச் சினங்கொண்டு, சீறி எழுகிறார் மந்திரி கோபாலர். முறைப்படி குற்றங்குறைகளுக்குச் சமாதானம் சொல்லியிருக்க வேண்டும் அதை விடுத்து, ஆத்திரங்கொள்வது முறையுமல்ல, பிரச்சினை தீர வழி தேடிய வகையுமாகாது. ஆத்திரங்கொண்டதோடுமட்டுமல்லாமல், என்செய்ய முடியும், எல்லாம் மத்திய அரசாங்கத்திடம் அடைக்கலம் அடைந்துவிட்டனவே என்று கூறி முகாரியும் பாடியுள்ளார்.

"கட்டுப்பாடு விதிக்கும் பிரச்னையில் நாங்கள் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுத் தீரவேண்டிய அவசியத்திலிருக்கிறோம். அவர்களைக் கலந்தாலோசிக்காமல் நாங்கள் எதையும் செய்யமுடியாது. இந்தப் பிரச்னையில் எந்த அபத்தமான நிலையையும் உண்டாக்கிக்கொள்ளாமல் நாங்கள் கவனித்துவிடுகிறோம்"

என்று, சகல அதிகாரமும் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

"சென்ற நான்கு ஆண்டுகளில் இவைகள்தாம் நாங்கள் சாதித்தவைகள் என்று சுட்டிக்காட்ட எங்களால் இயலாது. இவைகளைச் சாதிப்பதற்குக் கடன் மூலமாகவோ, வரிகள் மூலமாகவோ ஏராளமான பணத்தைக் கொடுக்க பொதுமக்கள் முன்வரவேண்டும், துரதிர்ஷ்ட வசமாக சில வரி விதிப்புகள் சட்டசபை உறுப்பினர்களாலும், பத்திரிகைகளாலும் எதிர்க்கப்படுகின்றன. அரசாங்கம் இரத்தவெறிகொண்டு அலைவது போன்ற எண்ணம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் கஷ்டங்கள் முழுவதும் மக்களால் உணரப்படவில்லை. ஆனால் அரசாங்கம் அபூர்வங்களைச் சாதிக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்று தம் முகாரி ராகத்தை நீட்டியுள்ளார்.

அரசாங்கம் இரத்த வெறி கொண்டலைவதுபோல, எண்ணம் உண்டாக்கப் பட்டிருக்கிறது என்று கூறி ஆயாசமடைகிறார் அமைச்சர். அந்த எண்ணம் உண்டாக்கப்பட வேண்டிய அவசியமேயில்லையே ஒவ்வொருவரும் அந்தத் தன்மையைத் தாங்களே உணர்கிறார்களே. தாங்க முடியாத வரிச்சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கும் மனிதன் தானே உணர்வானே, மற்றவர்கள் அவனுக்கு உணர்த்த வேண்டிய அவசியமில்லையே வரி கொடுத்தும் வாழ வழி கிடைக்காத மக்கள், வரிமேல் வரி விதிக்கும் அரசாங்கத்தைப் பார்த்து, இரத்த வெறிகொண்டலைகிறது என்று தானே சொல்லுவார்கள். அந்தச் சொற்களுக்குள்ள நேரடியான அர்த்தத்தை வைத்துக் கொண்டு பார்ப்போமானாலும், அரசாங்கத்தின் அடக்கு முறைகளும், துப்பாக்கிப் பிரயோகங்களும், சேலம் சிறையில் நடந்தது போன்ற இரத்த வெள்ளங்களும், அந்தக் கூற்றை உண்மை என்று தானே விளக்கி நிற்கும்.

அரசாங்கம் அபூர்வங்களைச் செய்யும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்களா? என்று கேட்கிறார் தோழர் கோபாலர். மக்கள் அப்படி எதிர்பார்க்கவில்லை. மந்திரிகள் சாதாரண ஆசாமிகள் தாம் என்ற உணர்வு இருக்கிற காரணத்தால். மக்கள் மந்திரிகளிடம் எதிர்பார்ப்பது கொஞ்சம் அறிவுடைமையை, அதன் வழி நடக்கும் அரசாங்கத்தை—அரசாங்கம் கடைபிடிக்க வேண்டிய நீதியை-நேர்மையை இன்றைய காங்கிரஸ் அரசாங்கம், ஏசுதல்—இழித்துரைத்தல்—பழித்துக் கூறுதல் போன்ற பண்புகளைக் குறைத்துக்கொண்டு, நீதி வழியே சென்று, நேர்மையான செயல்களை, எதிர்கால ஆக்கத்திற்கான வகையில், அறிவினைச் செலவழித்து ஆற்றிவருவார்களேயானால், அதுவேபோதுமானது. அதைத்தான் மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

காங்கிரஸாட்சியைப் பற்றி பாராட்டவில்லை மக்கள் என்று முகாரி பாடுவதை நிறுத்திவிட்டுக் கடமையை நல்ல முறையில் செய்ய நிதி அமைச்சரும், அவரைச் சார்ந்தோரும் வருவார்களானால், முகாரி பாட வேண்டிய அவசியமிருக்காது, மக்களே முன் வருவார்கள் மந்திரிமார்களைப் பாராட்ட!

அறிவுக் கதிர் !

ஆட்சி பீடமேறிய அரசாங்கத்தின் வாயே பத்திரிகை. ஆளவந்தாரின் செய்கைகளே செய்திகள். அவர்கட்கு, பிரசார பீரங்கியாக யிருப்பதே 'பத்திரிகா தர்மம்' இதுவே இன்றைய நிலை!

—தாம்ஸன்.

புகையைத் தடுக்க பிரிட்டனில் முயற்சி

லண்டன், பிப் 17—

பிரிட்டனின் தொழிற்சாலைகளிலிருந்து ஏராளமாகக் கரும்புகை வெளிப்பட்டுச் சுத்த காற்றைக் கெடுத்து விடுவதைத் தடுக்க, பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் புதுமுறைகளையும் புகை தராமல் நிற்கும் எரிபொருளையும் கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் புகைக் கூண்டு மூலம் 2300,000 டன் புகை வெளிப்படுகிறதென்றும், 500,000 டன் சாம்பலும், 500000 டன் சல்பர் டை ஆக்ஸைடும் வெளிப்படுகிறதென்றும், இதனால் கட்டிடங்கள் விகாரமாவதுடன் பொதுமக்கள் சுகாதாரமும் கெடுகிறதென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பிற்போக்கு சக்திகளை எதிர்க்க நேபாளத்தில் புதிய கட்சி!

முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஏற்பாடு

பாட்னா, பிப். 15—

நேபாள தேசிய காங்கிரசின் முன்னாள் தலைவரான பேராசிரியர், ரெஸ்மி "துனியதார் ஆமந்" என்னும் ஓர் புதுக் கட்சியைத் தோற்றுவித்துள்ளதாக அறிவித்தார். இக்கட்சி சமாதானம் நிலவவும், தொழிலாளர் நலத்திற்கும், தாழ்ந்த வகுப்பினரின் பாதுகாப்புக்கும் பாடுபடுமென தெரிகிறது.

நேபாளத்திலுள்ள எல்லா ஏகாதிபத்ய எதிர்ப்பாளர்களையும், நேபாள நிலச்சுவான் முறையினை எதிர்ப்பவர்களையும் சேர்த்து, ஒரு கூட்டு முன்னணி அமைத்து, நேபாளத்தில் சிறந்த ஜனநாயக சர்க்காரை நிறுவி சமூக, பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டுவதே இக்கட்சியின் முக்கிய குறிக்கோளாகும்.

ஸ்பென்ஸர் தொழிலாளர் மாநாடு

18—2—50 சனி மாலை 3-மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை, உயர்நிலைப் பள்ளியின் எதிரில் உள்ள மைதானத்தில் அமைந்துள்ள பந்தலில் ஸ்பென்ஸர் தொழிலாளர் மாநாடு நடைபெறும். தோழர் S. C. C. அந்தோணிப் பிள்ளை தலைமை வகிப்பார். பெரியார் திரு. வி. க. மாநாட்டைத் திறந்து வைப்பார். தோழர் S. பக்கிரிசாமி கொடியேற்றுவார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பா. செ. லிங்கம், S கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

பிரிட்டனில் ரெடிமேட் புகைவண்டி நிலையம்

லண்டன், பிப். 17—

லண்டன் 'டியூப்' ரயில்வேயில் சவின்ட் அன்ட் கேவின் ஸ்டேஷன் 'ரெடிமேட்' கட்டிடத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. பிளாட்பாரம், டிக்கெட் கொடுக்கும் ஆபீசு, தங்கும் அறை எல்லாம் கான்கிரீட் தகடுகளால் கட்டப்பட்டிருக்கின்றன. (ஏனோம்)

நாவிற்கடியில் வெடி மருந்து !

லண்டன், பிப். 17—

லீட்ஸில் ஆர்மலிசிறைக்கு வெடி வைத்து தப்பமுயன்ற கைதிகள் கெலிக்காட் வெடிமருந்து தங்களின் நாவிற்கடியில் மறைத்து வைத்து சிறைக்குள் கொண்டு சென்று வெடிகுண்டு தயாரித்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது. இவர்கள் பரிசோதிக்கப்பட்டே வந்தனர் என்றாலும், இவர்கள் வாயைப் பரிசோதிக்க அதிகாரிகள் தவறி விட்டனர். (குளோப்)

அபாய :: :: அறிவிப்பு!

விவசாயிகளிடையே அதிருப்தி அதிகமாக இருக்கிறது. எந்த சக்திகள் தலைதூக்கிவருகின்றன என்பதைக் குறித்து, சர்க்கார் அலட்சியமாக இருப்பதாகத் தெரிகிறது. சகிப்புத் தன்மை அதன் எல்லையைக் கடக்கும் நிலைமையிலிருக்கிறது. நிலச்சுவான்தாரர்கள் நிலைமையை உணர்ந்து, ரஷ்யாவில் ஏற்பட்டதுபோல் பெரும் புரட்சியும், அபாயமும் நேராமல் தடுக்க முயற்சிக்கவேண்டும்.

—டாக்டர் ஜே. சி. குமரப்பா

இத்தாலியிலும் பிரான்ஸிலும் குழப்பம்!

இத்தாலிய பத்திரிகைகள் மாஸ்கோ மீது பழிசுமத்துகின்றன

ரோம், பிப். 17—

இதாலியில் குழப்பம் ஏற்படுத்தி, பொருளாதார நிலையைச் சீர்குலைக்கும்படி மாஸ்கோ உத்தரவிட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, கவலை தெரிவித்து இதாலிய பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

இதாலிய பார்லிமெண்டில் கம்யூனிஸ்ட் மெம்பர் டோக்லியாட்டியும் அவருடைய சகாக்களும் ஏற்படுத்திய குழப்பத்தை எதிர்த்து, கோரியர்டெல்லா என்ற மெம்பர் பேசுகையில் இம்மாதிரி நடந்தால் பார்லிமெண்ட் விவகாரங்களே நடைபெறுவது சாத்தியமற்றதாகப் போய்விடும் என்று கூறினர்.

யோனலே டிடாலியா என்ற மெம்பர் பேசுகையில், இம்மாதிரி குழப்பம் விளைவிக்க வேண்டும் என்று கிரெம்லினிலிருந்து உத்திரவு கிடைத்தே இம்மாதிரி நடைபெறுகிறது என்று நினைக்கிறோம். பிரான்ஸிலும் இம்மாதிரி நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் குழப்பம் ஏற்படுத்த கம்யூனிஸ்டுகள் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றனர் என்றே தெரிகிறது.

அவசரப்பட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எளிதில் அறுத்தெறிய உதவியும்.

எனவே, வீணாக வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையிடம் அரசியலார் முட்டிக்கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. அது இருக்கிறபடியே இருக்கட்டும். அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் சமத்துவம் ஏற்படும் வரை, இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை இருந்தே தீரவேண்டும். அத்தகைய சமத்துவ நிலை தோன்றினால், இம்மாதிரியான சட்டங்களுக்கு நாட்டில் வேலையே இராது. அதற்குள் அவசரப்பட்டு, சிக்கலை அவிழ்ப்பதற்குப் பதிலாக, கயிற்றையே அறுத்து விடுவது போன்ற அர்த்தமற்ற வேலைகளில் அரசியலார் ஈடுபடாதிருப்பார்களாக!

தி.மு.க. பொதுச்செயலாளர்

மதுரை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

(நமது தனி நிருபர்)

நிலக்கோட்டை

நிலக்கோட்டை, பிப். 8— திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை, அமைப்புக்குழுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர், இன்று இரவு 7 மணிக்குத் தங்கள் குழுவினருடன் இங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களை நிலக்கோட்டை தி. மு. கழகத் தோழர்களும், பக்கத்திலுள்ள கிராம மக்களும் தாய்மார்களும் ஏராளமாக வந்து நின்று மாலையிட்டு வரவேற்றனர். நிலக்கோட்டை தெருக்கள் எல்லாம் இயக்கக் கொடிகளாலும், தோரணங்களாலும், வளைவுத்தட்டிகளாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தோழர் அண்ணாத்துரை அவர்கள் நகரில் பிரவேசித்ததிலிருந்து ஏராளமான வாண வேடிக்கைகளும், பொதுமக்களுக்கு அறிவிக்கும் வண்ணம் அதிர்வேட்டுகளும் போடப்பட்டன.

பின்னர் அண்ணாத்துரையும், என். வி. நடராசனும் ஊர்வலமாக, பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்திற்குப் பின், பஞ்சாயத்துபோர்டு முன்பாக மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார்கள் உட்பட 15 ஆயிரம் மக்களுக்கு மேல் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு நிலக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் இ. காத்தான் தலைமை வகித்தார். பொதுச் செயலாளருக்கும், நடராசன் அவர்களுக்கும் வரவேற்பு இதழ் அளிக்கப்பட்டு மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

முதலில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் இன்றுள்ள சர்க்காரின் போக்கு பற்றியும், குடி அரசான பின்னர் நமது நாட்டின் நிலைமை பற்றியும் மிகவும் விரிவாக சுமார் 1 மணி நேரம் பேசினார்.

அடுத்தபடியாக தோழர் அண்ணாத்துரை அவர்கள் பேசும்போது, இன்றுள்ள மக்கள் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அதைத் தெரியாமலும், தெரியவேண்டிய அவசியமற்றதைத் தெரிந்துகொண்டுமிருக்கிறார்களென்றும், மற்றும் எங்களை மதத்துவேஷி என்று கூறுவதற்கு யாதொருவிதமான ஆதாரமும் இல்லையென்றும் மிகவும் விரிவாக சுமார் 1-30 மணி நேரம் பேசினார்கள். தலைவர் நன்றிகூற கூட்டம் இரவு 10-30 மணிக்கு இனிது முடிந்தது.

தலைவர்களுக்கு நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் இரவு உணவு அளிக்கப்பட்டது. உடனே இரவு 12 மணிக்கு மேல் காரில் பட்டிவீரன்பட்டிக்குப் பயணமானார்கள்.

பட்டிவீரன்பட்டி

பட்டிவீரன்பட்டி, பிப் 9— நேற்று இரவு 1½ மணிக்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன் ஆகியோர் தனது குழுவினருடன் காரில் இங்கு வந்து சேர்ந்தனர். திடீரென இவர்கள் வரவைக் கண்ட இப்பக்கத் தோழர்கள் அன்று இரவு வந்து கூடிவிட்டனர்.

தலைவர்களுக்கு சத்திரத்தில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அன்றிரவு தோழர்கள் தெருக்களில் அலங்காரம் செய்துகொண்டிருந்தனர். அவைகளைக் கூட அப்படியே வேறு ஆட்களைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, உடனே தலைவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்தனர்.

சோழவந்தானிலிருந்து, முன்னணி விடுதலை ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் உடன் வந்திருந்தார்கள். அவரும் வேண்டிய வசதிகளைச் செய்து தந்தார்கள். மறுநாள் காலையில் நடைபெற்ற ஓர் திருமணத்தில் தோழர் என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், மா. இளஞ்செழியன் ஆகியோர் கலந்துகொண்டு திருமணம் என்பது பற்றி பேசினார்கள்.

பிற்பகல் 2 மணிக்கு நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, எல்லோருக்கும் பகல் உணவு அளிக்கப்பட்டது.

பின்னர் நகரின் பல பிரமுகர்களுக்குப் பேட்டியளித்தார்கள், இந்நகர் தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் அவர்களின் குமாரன் திருவா வந்து சிறிது நேரம் அண்ணாத்துரையவரிடம் பேசிக்கொண்டிருந்தனர்.

மாலை சிற்றுண்டிக்குப் பின் 4-மணிக்குக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மைதானத்தில், நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் நடராசன் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. இந்நகர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் நன்மைக்காக மேற்படி பள்ளி ஒரு மணி நேரத்திற்கு முன்பாக விடுமுறையளிக்கப்பட்டது.

ஏராளமான மாணவ மாணவிகள், தாய்மார்கள் உட்பட 7,000 பேர்களுக்குமேல் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் நமது வருங்கால வேலைத்திட்டம் பற்றியும், கணியூர் மாநாட்டில் நாம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கேற்ப நமது மாகாணத்தில் ஒரு லட்சம் அங்கத்தினர்களைச் சேர்த்துத்தர வேண்டுமென்றும், அவ்விதம் சேர்த்தவுடன், நாம் செய்யவேண்டிய வேலைகள் அனேகம் இருக்கின்றன என்றும், அதற்கான வேலைத் திட்டத்தை நாம் கைக்கொள்ள வேண்டுமென்றும் பேசினார்கள்.

பின்னர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் பேசும்போது அரசியலாரின் அடக்குமுறையைக் கண்டித்துப், இன்றுள்ள நிலைமையை விளக்கியும், தான் கூடிய விரைவில சிறைக்கு அனுப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும், இதற்கேற்ப சூழ்நிலை இருக்கிறது என்றும், சிறைக்குச் சென்றாலும், அங்கேயும் நமது கொள்கை பரப்பப்பட்டு, அங்குள்ள கைதிகளும், நமது கொள்கைகளைப் புரிந்துகொள்ள வசதி ஏற்படும் என்றும், எனவே சீக்கிரம் இந்தக் காரியத்தை சர்க்கார் செய்யட்டும் என்று கூறினார்.

அய்யம்பாளையம் தி. மு. கழகம். மாணவர் கழகம் பட்டிவீரன்பட்டி, மாணவர்கள் மற்றும் பலர் வாழ்த்துச் செய்திகளையும், மலர் மாலையையும் சூட்டினார்கள்.

பின்னர் அண்ணாத்துரை அவர்கள், தனது குழுவினர்களுடன் பாண்டியன் அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பாண்டியன் இல்லத்தில், அவர்களின் குமாரர்களான பாஸ்கரன், மூர்த்தி ஆகியோர் பொதுச் செயலாளரை வரவேற்று உபசரித்தனர். தோழர் பாஸ்கரன் அவர்கள் தங்கள் தோட்டத்தில் உள்ள பல பழ மரங்களையும், அதன் விளைச்சல்களையும் அண்ணாத்துரைக்கு விளக்கிக் கூறினார்கள்.

அடுத்தபடியாக காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரத்தையும் காண்பித்து, இயந்திரத்தை ஓட்டிவிட்டு, காப்பிக்கொட்டையை தினுசுவாரியாகப் பிரிக்கும் விதத்தை விளக்கிக் காட்டினார்கள். அத்துடன் "காபிகூரிங்" அசோசியேஷன் தனி அதிகாரிக்கும் அண்ணாத்துரை அவர்களை அறிமுகம் செய்து வைத்துவிட்டு, மற்றும் பல இடங்களையும் சுற்றிக் காண்பித்தார்கள். இவைகளைப் பார்த்துவிட்டு, சிரித்துக்கொண்டே, பட்டிவீரன்பட்டிக்குத் தான் வந்தது இதுதான் முதல் தடவை என்றும், கூடிய விரைவில் மற்றொரு தடவை வர முயற்சிக்கிறேன் என்றும் கூறினார்.

பொதுச் செயலாளருக்கும் அவர் குழுவினர்களுக்கும் ஓர் இனிய சிற்றுண்டி அளிக்கப்பட்டது. பாண்டியன் தங்களைப் பார்க்க விரும்பினார் என்றும், அவர் நேற்றுதான் சென்னைக்குச் சென்றுள்ளார்கள் என்றும் பாஸ்கரன் கூறினார்.

பின்னர் காரில் அண்ணாத்துரை அவர்கள் வத்தலகுண்டிற்குப் பயணமானார்கள்.

(ந. நி.)

கொச்சிக்கும் திரிகோண மலைக்குமிடையே இந்திய கடற்படை ஒத்திகை

லண்டன், பிப். 17— இந்திய பிரிடிஷ் கடற்படைகளின் கூட்டு ஒத்திகை கொச்சிக்கும் திரிகோண மலைக்குமிடையேயுள்ள கடலில் பிப்ரவரி 27ம் தேதி முதல் மார்ச் 22 வரை நடைபெற விருக்கிறது. இதில் குரூய்ஸர் டில்லி நாசகாரி ப்ளோட்டிலா முதலியவை கலந்துகொள்ளும்.

சுகத்தை அடையவில்லை!

(போரூர் சண்முகனார்)

'உனக்கும் எனக்கும் இசைந்தபொருத்தம் என்ன பொருத்தமோ' என்கிற மெட்டு

சுதந்திரத்தை அடைந்தோம் என்று பள்ளுபாடும் நாம்
சுகத்தை அடையவில்லையென்று சொல்லும்படி நேர்ந்ததே!
தேனும் பாலும் வழிந்து ஓடும் என்று சொன்னார்கள்
திரும்பிப் பார்த்தால் தண்ணீர்கூட ஓடக்காணோமே!
வரியையெல்லாம் குறைத்திடுவோம் என்று சொன்னார்கள்
வரிமேலேவரி யாக வந்ததுதலைமேலே
பட்டினியைப் பறக்கடிப்போம் என்று சொன்னார்கள்
பட்டினியால் மக்களேதாம் பறந்து போகின்றார்கள்!
மிளகின் விலை என்னவென்று கேட்டுப் பார்த்தாலோ
மூவேழு ரூபாயென்றால் உள்ளம் கொதிக்குதே
மிளகாய் விசை எப்படித்தான் இருக்குதென்றாலோ
மூணும் ஒண்ணும் ரூபாயென்றால் உடம்பு எரியுதே!
சர்க்கரைக்கு "க்யூ"வில் நின்று தவம் புரிந்தாலும்
சர்க்கரையே இல்லையென்றால் துக்கம் வருகுதே
குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் ஒவ்வொன்றும்
குடி முழுகும் விலையாக விற்குதே என்செய்வோம்
உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க வீடு மூன்றும்
உலகில் உள்ள மக்களுக்கு முக்யமாக தேவையே
அதற்கே வழி இல்லையென்றால் எப்பவும் நம் கதி என்ன?
அடைந்துவிட்ட சுதந்திரத்தால் அடைந்த பலன் என்னவோ!
நாட்டுக்கரசன் நல்லவனாய் வந்த போதிலும்
நாட்டிலுள்ள தோட்டிக்குத்தன் புல்சுமை போகாது
என்று இனிய தமிழில் வழங்கும் இங்குப் பழமொழி
எள்ளளவும் பொய்க்கவில்லை என்று கண்டு கொண்டோமே

மீசையைப் பறிகொடுத்த போலி இட்லர்!

இட்லர்கள் பலரில் இவரும் ஒருவரா?

பெர்லின், பிப். 17— இட்லரைப் போலவே தோற்றமுடைய ஹென்ரிச் ரோல்ஸ் என்பவர் இட்லரைப் போலவே மீசையையும், தலைமயிரையும் வைத்துக் கொண்டிருந்தால், அவரை சினிமாவில் இட்லராக நடிக்கும்படி பல பட முதலாளிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

இவர் ஒரு நாள் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ இவருடைய மீசையையும், தலைமயிரையும் கத்தரித்து விட்டனராம். இதை மறுநாள் காலையில் எழுந்ததும் கண்ட இவர் போலீஸாரிடம் புகார் செய்திருக்கிறார். ஜர்மனியில் இட்லரைப் போலவே பலர் இருப்பதாகத் தெரிகிறது. —ராய்ட்டர்

பிளவு ஏற்படுத்துவதே ரஷ்யா நோக்கமாம்!

"நியூயார்க்டைம்ஸ்" கருத்து

நியூயார்க், பிப். 17— ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்ததின் காரணம், பிரிட்டன், பிரான்ஸ் அநேகமாக இந்தியா இவைகளின் கொள்கைகளில் பிளவு ஏற்படுத்துவதற்காகவேதான் என்று நியூயார்க் டைம்ஸ் தலையங்கம் எழுதியிருக்கிறது.

இந்த ரஷ்ய ராஜ தந்திரத்தை முறியடிக்க நமக்கிடையே மன உறுதி அவசியம் என்றும், நாம் இச் சமயத்தில் குழப்பமடையாமல் புத்திசாலித்தனமாகவும், தைரியமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

சகாராவில் ராக்கெட் ரேஞ்ஜ்

பாரிஸ், பிப். 17— வட ஆப்பிரிக்காவில் சகாரா பாலைவனத்தில் ஓரான் துறைமுகத்திற்குத் தெற்கே ராக்கெட் ரேஞ்ஜ் ஒன்றை பிரான்ஸ் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஓரானிலிருந்து இப்பகுதிக்கு ரயில்வே போடப்படுகிறது.

ஆர்ஜென்டினாவில் பத்திரிகை சுதந்திரம் பறிபோகிறது

ஆர்ஜென்டினா பிரஸிடெண்ட் பேரான் எல்லா பத்திரிகைகளையும் தன் கைக்குள் போட்டுக் கொள்வதில் வெற்றி பெற்றுவருகிறார். கட்டுப்படுத்தும் வன்மையை 'விற்கத்' தயாராக இருக்கும் பத்திரிகைகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதாம். இம்மாதிரி சமர்ப்பித்து 'எல் டேரோல்' என்ற பத்திரிகை மீண்டும் பிரசுரிக்கப்பட ஆரம்பித்திருக்கிறது. கட்டுப்படுத்தும் உரிமையைப் பெறும் அலிவா ப்ளிஷிங் கம்பெனியில் பேரான் மனைவி, பேரானின் மைத்துனன், பேரானின் அந்தரங்க காரியதரிசி இவர்கள்தான் டைரக்டர்கள். இம்மாதிரி இதர பத்திரிகைகளும் தங்களைக் கட்டுப்படுத்தும் உரிமையை இந்தக் கம்பெனிக்கு விற்கத் தயாராக இருந்தால் மீண்டும் நடத்த அனுமதிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றனவாம்.

இதுவரை ஆர்ஜென்டினாவில் 154 பத்திரிகைகள் மூடப்பட்டிருக்கின்றன. 21 பத்திராதிபர்கள் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். நியூஸ் பிரிண்ட் சப்ளை நிறுத்தப்பட்டுவிட்டதால், அநேக பத்திரிகைகள் சீக்கிரமே மூடப்படும் என்று தெரிகிறது.

விமானத்தை தானாகவே கண்டுபிடித்துச் சுடும் பீரங்கி!

நியூயார்க், பிப். 17— எதிரி விமானங்களைத் தானாகவே கண்டுபிடித்துச் சுடும் விமான எதிர்ப்பு பீரங்கி ஒன்று [illegible] இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 175 மைலுக்கு அப்பால் வரும்போதே 80,000 அடி உயரத்தில் வரும் விமானங்களைக் குறிபார்த்து இது தானாகவே சுடக்கூடியதாம்.

லண்டன், பிப். 17— மார்கெட் ஹார்பரோ கோர்ட்டில் ஒரு சட்ட நுணுக்க விஷயம் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. ஒரு சாட்சி தூங்கி குறட்டைவிட்டதினால் நடுவில் நிறுத்தப்பட்டது. குறட்டைவிட்ட சாட்சியை போலீஸ்காரர் தட்டி எழுப்பியபின் மேற்கொண்டு வழக்கு நடைபெற்றது.

வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு

ஈரோட்டில்

அனுதாபக் கூட்டம்

19—2—50 ஞாயிறு மாலை 5-மணிக்கு

நடைபெறும்

தோழர்கள் எஸ். கே. சென்னியப்பக்கவுண்டர் (நகரசபைத் தலைவர்), கே. என். குப்புசாமி பிள்ளை (நகரசபை உப தலைவர்) எம். சிக்கைய நாயக்கர், டாக்டர் எல். கே. முத்துசாமி எம்.பி. பி.எஸ்., கேவலலால் காளிதாஸ் சேட், எம். சி., இ. எஸ். தண்டபாணி அய்யர் பி. ஏ., பி. எல், ஜி. அற்புதசாமிப் பிள்ளை பி.ஏ.பி.எல். செங்கோட கவுண்டர் எம். சி, கே. ஆர். ராமசாமி, சி. என். அண்ணாதுரை மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

எஸ். ஆர். சந்தானம்,
செயலாளர் தி. மு. க.

தி. மு. கழகக் கூட்டங்கள்

19 - 2 - 50

தாத்தையங்சார்பேட்டை (மாலை 4 மணிக்கு):— தளையூர் (மாலை 6 மணிக்கு)	இரா. நெடுஞ்செழியன், ஜி. பராங்குசம்
தூத்துக்குடி :—	என். எஸ். இளங்கோ, எஸ் ஒ. வெற்றிவேல், இரா. சு. தங்கப்பழம்
குன்னூர்:—	ஜி. என். இராஜூ
கோவை:—	கே. ஏ. மதியழகன், சி. எஸ். சின்னத்துரை, சென்னியப்பன். பி. பாலசுந்தரன், எஸ். அப்பாவு

20 - 2 - 50

அம்பலூர் :—	சி. பி. சிற்றரசு.
கல்லிடைக்குறிச்சி :—	என். எஸ். இளங்கோ, எஸ். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

21 - 2 - 50

எக்லாஸ்புரம்:—	சி. பி. சிற்றரசு

நகராண்மைக் கழகத் தேர்தல்

தோழர் தாமோதரம் வழக்கு தள்ளுபடி

சென்னை, பிப் 16—

சென்னை நகரசபை 25-வது பகுதிக்குத் தோழியர் ராஜபாரதி அபேட்சகராக நிற்பது சட்டப்படி செல்லாது என்று தோழர் எம. தாமோதர நாயுடுவால் சென்னை சிறு வழக்கு மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கை இன்று நீதிபதி தள்ளுபடி செய்தார்.

சென்ற ஆண்டு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் தோழியர் ராஜம்பாரதி பொய் வோட்டுகள் மூலம் வெற்றிபெற்றார் என்று, அதனால் அவரது உதவி செல்லத்தக்கதல்ல வென்றும், தோழர் தாமோதரம் நாயுடுவால் தொடரப்பட்ட வழக்கில் மறு தேர்தல் நடத்தும்படி நீதிபதி உத்தரவிட்டதும் வாசகர்கட்கு நினைவிருக்கும்.

நன்றி

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மதுரை வந்தபோது பொதுக்கூட்டத்திலும், உட்கிளைகளின் நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு, மதுரை சரித்திரத்திலேயே, கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானம் கண்டிராத பெருங்கூட்டத்தை அமைதியாக, அழகாக நடத்தி, கடைசிவரை ஒத்துழைத்த சமுகத் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும், கழக ஆதரவாளர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. எஸ். ராஜமான்,
விளம்பர உறுப்பினன்,

தேன் உண்பவர்கள் நீண்டநாள் வாழலாம்!

லண்டன், பிப் 7—

ரஷ்யாவில் மற்றவர்களைக்காட்டிலும் தேனீ வளர்ப்பவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள் என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

இவர்கள் எல்லோரும் 100 வருஷங்களுக்கு மேல் வாழ்கிறார்கள் என்றும், இவர்கள் தேன் அடைகளை ஆகாரமாக உட்கொள்கிறார்களென்றும் தெரியவருகிறது.

இனி நடப்பவை

சென்னை:— சூளை மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் 19-2-50 ஞாயிறு காலை 10 மணிக்கு வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு காமாக்ஷி அம்மன் கழகப் பள்ளியில் திருக்குறள் சிறப்புக்கூட்டம் நடைபெறும். புலவர் வே. த. அர்ச்சுனனார் தலைமை வகிப்பார். தோழர்கள் ச. தங்கவேலனார் பி. ஓ. எல் (ஆனர்ஸ்), புலவர் நன்னன், தோழியர் தேவகி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

குன்னூர்:— இவ்வூர் தி. மு கழகச் சார்பில், 19-2-50 ஞாயிறு மாலை 4 மணிக்கு ஐவர்பேட்டையில், டாக்டர் நடேசன் நினைவுநாள் கொண்டாடப்பெறும். தோழர் கோபி ஜி. என். இராஜூ மற்றும் பலர் பேசுவர்.

* * *

கோவை:— நகர திராவிட முன்னேற்றக் கழகத்து தலைவர்விழா, 19-2-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு டவுன் ஹால் மைதானத்தில் நடைபெறும். தோழர் கே. ஏ. மதியழகன், மற்றும் கல்லூரி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பலரும் கலந்துகொள்வர்.

* * *

கோவை:— இந்நகர் தி. மா. சொற்போர் மன்றத்தின் சார்பில், 19-2-50 ஞாயிறு காலை 9 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெறும். தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. "அரசியலில் மாணவர்களின் பங்கு," "தி. மா. மு. கழகக்கொள்கைகள்" என்பவை பற்றி பேசுவார்.

* * *

ஆம்பூர்பேட்டை (வாணியம்பாடி) இவ்வூர் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 19-2-50 ஞாயிறு இரவு 8 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் வி. எஸ். விசுவநாதனார் தலைமையில் தோழர்கள் கி. ஆ. பெ. விசுவநாதம், ஜனாப் அப்துல் சுபூர்சாகிபு, வித்வான் இராகவேந்திரராவ், ஆகியோர் "தமிழரும் திருக்குறளும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்.

பொழுதுபோக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை — மூதல் முழக்கம்

தமிழ்

பிராட்வே	—	பொன்முடி
கமலா	—	,,
பிரபாத்	—	ரத்னகுமார்
சித்திரா	—	,,
நியூ மகன் (சைதை)		வாழ்க்கை
ஈகாராணி	—	,,
பாரகன்	—	,,
லட்சுமி	—	,,
ஒரைன்	—	கிருஷ்ணவிஜயம்
கெயிட்டி	—	,,
சரஸ்வதி	—	ஞானசௌந்தரி

தெலுங்கு

வெலிங்டன்	—	குணசுந்தரி கதை

ஆங்கிலம்

Midland	—	The Three Musketeers
Casino	—	Joan of Arc
Minerva	—	Take one False Step
New Globe	—	Roseanna Mc Coy
New Elphinstone	—	White Heat
Roxy	—	Tne BlueLagoon
Sun	—	Bandit of Sherwood Forest

ஹிந்தி

அசோக்	—	ஷப்னம்
செலக்ட்	—	அந்தாஜ்
ஸ்டார்	—	சஜான்
சாகர்	—	ஆஜ்-கி-ராத்
சினிமா சென்ட்ரல்		பச்பன்

விற்பனையாகிவருகிறது

1950-ஆண்டு காலண்டர்

அறிஞர் அண்ணாதுரை, கவிஞர் பாரதிதாசன், கே. கே. நீலமேகம், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஈ. வி. கே சம்பத், க. அன்பழகன் கே. ஏ. மதியழகன். மு. கருணாநிதி, சி பி. சிற்றரசு, டி. கே சீனிவாசன், இராமாமிர்தத்தம்மையார். சத்தியவாணிமுத்து, மறைந்த செல்வங்கள் ஏ. டி. பன்னீர்செல்வம், அழகிரிசாமி, என். அர்ச்சுனன் முதலியவர்களின் திரு உருவமைந்த மிக அழகிய ஒரே காலண்டர்

விலை 0—6—0

வியாபாரிகட்குத் தக்க லாபம் தரப்படும்
தேதி—மாதம் சீட்டுக்கொண்டது அளவு 18x11
கொஞ்சப் பிரதிகளே கைவசமுள்ளதால் தேவைக்கு இப்பொழுதே எழுதவும்

விவரங்கட்கு:— திராவிடன் பதிப்பகம்,
P. B. No. 18, வேலூர் N. A.

தி. மு. கழகக் கிளைகள்

குந்தாரப்பல்லி—சிற்றூர்க்கிளை

குந்தாரப்பல்லி, பிப். 2—

1-2-50 அன்று மாலை தோழர் சே. வி. வேணு அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற தி.மு.க. அமைப்புக் கூட்டத்தில், "தி. மு. கழகம்—குந்தாரப்பல்லி (கிருஷ்ணகிரி வட்டம்) சிற்றூர்க்கிளை நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்-என். நாராயணன்; பொருள் உறுப்பினர்-சே. வி. வேணுகோபால் ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மானூர்—சிற்றூர்க்கிளை

மானூர், பிப். 5—

5-2-50 அன்று இவ்வூர் தி. மு. க. தோழர்கள் அனைவரும் கூடி, "தி. மு. கழகம்—மானூர் (மதுரை வட்டம்) சிற்றூர்க்கிளை" நிறுவினர். பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-க. முத்துக்குமார்; பொருளாளர்: என். தங்கப்பா, விளம்பர உறுப்பினர்-ம. தலைசாமி; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:- எஸ். டி. ராமலிங்கம், ஐ. சுப்பிரமணியன், ஏ. ராமசுவாமி, பிச்சைமூர்த்தி, கா. அப்துல் ரஹமான். முடிவாக செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

நெல்லை—நகரக்கிளை

நெல்லை, பிப். 6—

5-2-50 ஞாயிறு காலை பத்து மணிக்கு, நெல்லை நகர் அறம் வளர்த்த புது மடத் தெரு 110-9 எண் கட்டிடத்தில், தோழர் எஸ். பாலகிருட்டிணன் அவர்கள் தலைமையில், "திராவிட முன்னேற்றக் கழகம்—நெல்லை நகரக்கிளை" அமைக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:-எஸ். பாலகிருட்டிணன்; துணைச் செயலாளர்:— பே. ஆ. பாலகிருட்டிணன்; விளம்பர உறுப்பினர்:-இரா. சு. இராமச்சந்திரன்; பொருள் உறுப்பினர்:— வை உலகநாதன்; ஏனைய செயற்குழுவினர்கள்:-அ. இராமநாதன், டி. என். முருகையா, த. நடராசு, ச. பெருமாள், ப. இலக்குமணன். தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

நெல்லிக்குப்பம்—சிற்றூர்க்கிளை

நெல்லிக்குப்பம், பிப். 2—

2-2-50 அன்று மாலை தோழர் வீ. இளங்கோவன் இல்லத்தில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் இரா. அ. வடிவேல் தலைமையில் நடைபெற்றது. அதுபோது 'தி.மு.க. நெல்லிக்குப்பம் சிற்றூர்க் கிளை நிறுவப்பட்டது. பின்னர் கீழ்க்கண்ட செயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் :- சி. இளவழகன்; துணைச்செயலாளர் : வீ. இளங்கோவன்; பொருள் உறுப்பினர் :-வி. அ. அமீது; விளம்பர உறுப்பினர்:- அ. தமிழன்பன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் :—ர. இளமாறன், ச. இராசகோபால், இரா. தேவநாதன், குப்தா, மு. க. சாலி. மாவட்ட செயற்குழுவிற்கும் பிரதிநிதிகளாகத் தோழர்கள் வி. அ. அமீது, ச. இராசகோபாலன் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மூல வியாதிக்கு

கருணைக் கிழங்கு லேகியம்.

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும். வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.

12 நாள் மருந்து ரூ. 3—0—0
12 நாகபஸ்பம் ரூ. 2—0—0

P.S.R. பங்கஜம் வைத்யசாலை
பழனி (S. I.)

தி. மு. கழகம்

இதுவரை தழைத்துள்ள கிளைகள்

438

பொங்கல் விழா

உறையூர், ஜன. 17—

14-1-50 அன்று உறையூர் சேட் மக்கா நினைவு உயர்நிலைப்பள்ளியில் பொங்கல்விழா நடைபெற்றது. அதுபோது மன்றத்தலைவர் வே. மாணிக்கம் பிள்ளை தலைமையில் திருச்சி மாவட்ட இலக்கிய கழகத் தலைவர் ஜி. வரதராசன் பி. ஏ. சிவசங்கரம் பிள்ளை, மன்ற ஆசிரியர் பெ. சா. அண்ணாமலை, திருக்குறள் முனுசாமி ஆகியோர் வள்ளுவரைப்பற்றியும், தமிழர் திருநாளைப் பற்றியும் விரிவான சொற்பொழிவாற்றினர்.

பின்னர் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1